2. அறிவிப்புகள்.

(அ) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் ஆகியவை குறித்து :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 55, உள் விதி (1)-ன் கீழ், கீழ்க்கண்ட தீர்மானங்கள் வரப்பெற்றுள்ளன.—

(1) திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : "திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையிலான அமைச்சரவையின்மீது இந்த அவை நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கிறது."

(2) திரு. ஆர். உமாநாத், திரு. கு. ரமணி, திரு. சி. கோவிந்தராசன் மற்றும் திரு. மு. அம்பிகாபதி : "மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட மந்திரி சபையின் தொழிலாளர் பற்றிய கொள்கையை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நிராகரிக்கிறது."

3. Thiru J. JAMES :

"This House expresses its disapproval of the law and order policy of the Ministry headed by Hon. Chief Minister, Thiru M. G. Ramachandran."

4. Thiru M. A. LATHEEF :

"That this House expresses its disapproval of the policy of the Ministry headed by the Hon. Thiru M. G. Ramachandran towards the minority communities."

இத்தகைய தீர்மானங்கள் கொடுக்கப்படுவது அரசின் சில கொள்கைகளை, சில செயல்களைக் கண்டிப்பதற்கும், முடிந்தால் அதன் மூலம் அமைச்சரவையைப் பதவி இழக்கச் செய்வதற்கும் தான். இப்போது நாம் கூடியிருப்பது ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கும், தொடர்ந்து நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அதன் மீது விவாதம் நடத்துவதற்கும் ஆகும்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறுகையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அரசின் எந்தச் செயலையும் அல்லது கொள்கையையும் கண்டித்துப் பேசப் பரவலான வாய்ப்பு உள்ளது. ஆளுநர் உரையில் கூறியுள்ள விவரங்கள் மட்டுமின்றி, பேரவையின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, மற்ற விவரங்களையும் பற்றிக் கூட, திருத்தங்கள் கொடுப்பதன்மூலம், விவாதிக்க மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வாய்ப்பு உள்ளது.

1979 பிப்ரவரி 13] [திரு. எம். ஏ. லத்தீப்]

ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைதான் ஆயினும், அது அரசின் கொள்கைகள், திட்டங்கள் பற்றிய உரையே ஆகும். எனவே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை எதிர்த்து வாக்களிப்பதன் மூலமோ, அல்லது அத்தீர்மானத்திற்குத் திருத்தம் கொண்டு வந்து, அத்திருத்தத்தை ஆதரித்து வாக்களிப்பதன் மூலமோ, அரசின் கொள்கையைக் கண்டித்து வாக்களிப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

இக்காரணங்களினால், பேரவையின் விதி 68, உள்விதி (3) (viii)-ன் கீழ் இத் தீர்மானங்களுக்கு இசைவு தர மறுக்கலாம்.

ஆயினும் பெரும்பான்மை எதிர்க்கட்சித் தலைவர்கள் இத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி இருப்பதாலும், இதுவரை பின்பற்றி வந்த மரபுக்கு முரணாக இருந்தாலும் இத்தீர்மானங்களை முன்மொழிய என் இசைவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலில், திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா அவர்களின் தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி அளிக்கலாம் என்று கருதும் மாண்புமிகு உறுப்பினர்களை அவர்கள் இடத்தில் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் 24 பேர்களுக்குமேல் எழுந்து நின்றார்கள்.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : 24-க்கும் அதிகமான மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவாக இருப்பதால், தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி அளிக்கப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து திரு. ஆர். உமாநாத், திரு. கு. ரமணி, திரு. சி. கோவிந்தராசன், மற்றும் திரு. மு. அம்பிகாபதி ஆகியோர் ஒரே ஒரு பொருள் குறித்த தீர்மானம் கொடுத்திருப்பதால், முதலில் கொடுக்கப்பட்ட திரு. உமாநாத் அவர்கள் தீர்மானத்தை மட்டும் எடுத்துக்கொள்கிறேன். மற்றதைத் தள்ளிவிடுகிறேன்.

திரு. உமாநாத் அவர்கள் தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி அளிக்க ஆதரவாக உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் தம் இருக்கையில் எழுந்து நிற்கக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் 24 பேர்களுக்கு மேல் எழுந்து நின்றார்கள்).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : 24-க்கும் அதிகமான மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவாக இருப்பதால், தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி அளிக்கப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [1979 பிப்ரவரி 13

அடுத்து, திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களின் தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி அளிக்க ஆதரவாக இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் தம் இருக்கையில் எழுந்து நிற்கக் கேட்டுக் கொள் கிறேன்.

(உறுப்பினர்கள் 24 பேர்களுக்கு மேல் எழுந்து நின்றார்கள்.)

மாண்பமிகு பேரவைத் தலைவர் : 24-க்கும் அதிகமான மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவாக இருப்பதால், தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. லத்தீப் அவர்களின் தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி அளிக்க ஆதரவாக இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் தம் இருக்கையில் எழுந்து நிற்கக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் 24 பேர்களுக்கு மேல் எழுந்து நின்றார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 24-க்கும் அதிகமான மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவாக இருப்பதால், தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-20].

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 55-வது விதி, உள் விதி (2)-ன் படி, அனுமதி அளிக்கப்பட்ட நாளில் இருந்து 10 நாட்களுக்குள் ஒரு நாளை இத் தீர்மானங்களின் மீதான விவாதத்திற்கு ஒதுக்கவேண்டும். ஆளுநர் உரைக்கு நன்றி தெவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியபின் எடுத்துக் கொள்வதா, அல்லது இடையில் எடுத்துக் கொள்வதா என்பதை இன்று கூடும் அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து அவை உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை திரு. சுப்பு அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நேற்று நான் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு, ''உங்களுக்கு ஆளுநர் உரையின்மீது பேச வாய்ப்பிருப்பதால், இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது'' என்று நோட்டீஸ் விட்டிருக்கிறீர்கள். ஆனால் மேலவையில் இது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து மேலவையில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைக் காட்டி என்னுடைய தீர்ப்புக்குக் களங்கம் கற்பிக்கக்கூடாது.

திரு. அ. ரகுமான்கான் : உங்களிடம் இருந்து விளக்கம் கேட்டுத் தெரிந்து கொள்ளவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு இதிலே ஏதாவது விளக்கம் வேண்டுமானால், என்னுடைய கவனத்தை ஈர்க்கவேண்டுமானால் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று நோட்டீஸ் கொடுக்கலாமே தவிர, அவையிலே எழுப்ப உங்களுக்கு உரிமை கிடையாது.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அதை மட்டும் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

3. உரிமைப் பிரச்சினை

முதலமைச்சர் மீது.

Thiru K. SUPPU : Under Rule 184 of the Assembly Rules, I wish to raise the following matter of privilege against the Hon'ble Chief Minister, viz.

On 9-2-79 when the Chief Minister commented about the reported walk out by six opposition parties in the Assembly during the Governor's Address he has stated certain things which are completely contrary to the facts and misleading the public. The statement has been widely published by the news papers. "The Mail" in its evening edition on 9-2-79 has published the statement in front page which reads as follows :—

"Speaking to newsmen in his chamber, at the conclusion of the Governor's Address to the members of the two Houses of Legislature, the Chief Minister pointed out that his party, while in opposition had also staged such walk outs. But there was a difference in the present walk out by some opposition parties and the walk out staged by the AIADMK when it was in the opposition.

The members of the ruling party then jeered at the AIADMK members, hurled uncomplimentary epithets at them and even chappals were thrown at the AIADMK benches by the then ruling party.

In contrast to what had become normal practice when the D. M. K. was in power, the AIADMK had strictly abided by the democratic norms and the end result was the incident passed off peacefully.."

The Chief Minister has undoubtedly tarnished the image of the D. M. K. by this deliberately false and misleading statement.